முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1327

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.05.2023, வியாழக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
   ஞானவான்கள் துணைகொண்ட தேசிகனே
   வனவர்கள் மெச்சும் அரங்கனே
   வாழுகின்ற வள்ளலே ஞானத்தலைவனே
2. தலைவனாக எந்தன் அவதாரமாக
   தரணியில் அற்புதம் நடத்தவந்த
   காலத்தை வென்ற தேசிகனே
   கருணையே வடிவான குருஅரங்கனே
3. ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 04 ம் நாள், 18.05.2023, வியாழக்கிழமை)
   காலமதில் அரங்கன் உன் திருவடி பற்றி
   கலியுகத்தார் ஞானம் பயில
4. பயிலுகின்ற அன்பர்கள் அவரவர்க்கும்
   பழுதின்றி ஞானம் சித்திக்கும்
   தயவோடு உன் திருவடி பற்றி
   தர்மத்தை தொடரும் மக்களுக்கு
5. மக்களுக்கு ஆறுமுகன் யான் இறங்கி
   தர்மவடிவாக உலகில் காட்சி தந்து
   தந்துமே அவரவர்கள் பிறவாமைக்கு
   தக்கபடி சர்வபலம் தந்தருள்வேன்
6. பெருமைமிக்க உன் தர்மத்தில்
   பிசகின்றி எந்த பொருள் பற்றுமின்றி
   உருகி மனமுருகி உன் பூஜைசெய்து
   உயர்வாக கடைபிடித்த அன்பர்கட்கெல்லாம்

7. அன்பர்கள் எல்லோருக்கும் இனிதே
ஆறுமுகன் யான் அவரவர் வாழ்வாதாரம் உயர்த்தி
இன்பமான இல்லற சிறப்போடு
இனிதே அவரவர் குடியவர்க்கும் ஞானம் இந்த தர்மத்தின் மூலம்
தந்தருள்புரிவேன்
8. அருளவே உண்மை விசுவாசிக்கு அகிலத்தில் தனிப்பெரும் தன்மை உண்டு
பெருமளவில் அவர்கள் வாழ்விலே பிரம்ம சூட்சும மகா இரகசியங்கள்
இரகசியங்கள் எல்லாம் அரங்கன் காட்சியாகவே
இந்த உலகில் சயனவழி தியானத்தின்வழி சர்வசூட்சுமத்தின் வழி
வெளிபட்டு அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–